பக்கங்கள் 6

ஈழநாடு
The Eelanaadu

60 சதம்

லர் 23 சித்திரை 15 ஜ. ஆகிர் 21 இதழ் 76
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 27 1981 1981

ஆனந்தசங்கரி மனமாற்றம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சித் தமிழ் பி திரு. வி ஆனந்தசங்கரி தமிழர் விடுதலைக்கூட்டணியிலிருந்து வெளியேறமாட்டார்.

கட்டுக்கோட்டை எம். பி. திரு தா திருநாவுக்கரசுவிலகி தில் நேற்றுக்காலை இடம்பெற்ற சமரசமூடாகவே வெற்றி பற்றனதத் தொடர்ந்து, கூட்டணியிலிருந்து வெளியேறும்முடிவை திரு. ஆனந்தசங்கரி மாற்றிக் கொண்டார்.

இவரது கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு, யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபை கூட்டணி வேட்பாளர் பட்டியலில் திரு திருஷ்ணராசாவுக்கு இடம் வழங்கப்பட்டுள்ளது.

(5-ம் பக்கம் பார்க்க)

ராஜினமா!

பம்பாய், ஏப். 26

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஆரம்பகாலத் தலைவர்களில் ஒருவரான எஸ். ஏ. டாங்கேயைக் கட்சியிலிருந்து விலக்கியதை ஆ சேபித்து 50க்கும் அதிகமான கடசித் தொண்டர்கள் கட்சியிலிருந்து ராஜினமாச் செய்துள்ளனர்.

மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல்:

நியமனப்பத்திரம் தாக்கல்:

இன்றுகடைசிநாள்

பல பகுதிகளில் உறுப்பினர்கள் போட்டியின்றி தெரிவாகலாம்

(யாழ்ப்பாணம்)

ஜூன்மாதம் நான்காம் திகதி நடபெறவிருக்கும் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலுக்கான வே பாளர் நியமனப் பத்திரங்கள் இன்று நண்பகல் 12 மணிவரை ஏற்றுகொள்ளப்படும் அதேநேரத்தில்; பல பகுதிகளில் அபிவிருத்தி சபை உறுப்பினர்கள் போட்டியின்றி தெரிவு செய்யப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

போட்டியின்றித் தெரிவு செய்யப்படுபவர்களின் விபரங்கள் இன்று பிற்பகல் அறிவிக்கப்படும் என்று தேர்தல்ஆணையாளர் அறிவித்துள்ளார்.

ஐக்கியதேசியக்கட்சி சகல (24) மாவட்டங்களிலும் போட்டியிடுகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணி வடக்கிலும், கிழக்கிலுமாக மொத்தம் ஏழு மாவட்டங்களிலும், தமிழ்காங்கிரஸ் வடக்கு தாலு மாவட்டங்களிலும் தொழுபிலும் போட்டியிடுகின்றன.

இவைதவிர சில சுயேச்சைக் குழுக்களும் இத்தேர்தலில் குதிக்கின்றன.

யாழ். மாவட்டத்தில்

வேட்புமனுக்கள் இம்மாதம் இருபதாம் திகதி முதல் ஏற்றுக்கொள்ளப்படுமென்று அறிவிக்கப்பட்டபோதிலும், யாழ் மாவட்டத்தில் இன்றுதான்கட்சிகள் தங்களது வேட்பாளர் நியமன மனுக்களைத் தாக்கல் செய்கின்றன.

யாழ் மாவட்டத்தில் ஐ. தே. கட்சி, கூட்டணி, தமிழர் காங்கிரசுடன், சோஷலிச முன்னணியும் இன்று வேட்புமனுக்களை தாக்கல் செய்யும்.

ஐ.தே.க. பட்டியல்

'தியாகரு'க்கு முதலிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபைத்தேர்தலில் போட்டியிடவுள்ளஐக்கியதேசியக்கட்சி வேட்பாளர்கள்பட்டியல் வருமாறு:-

1 திரு. ஆ. தியாகராசா (முன்னாள் வட்டுக்கோட்டை எம். பி.) 2. திரு. ஏ. சி. சந்திரசேகரம் (பருத்தித்துறை), 3. திரு சி இ குணரத்தினம் (சிறுபாண்மைத்தமிழர் பிரதிநிதி), 4 திரு. எஸ். ஏ. சிவபூமி யாழ்ப்பாணம், 5. திரு. நடராசா சிற்றம்பலம் (கிளிநொச்சி), 6. திரு. சேவியர்துரை (சாவகச்சேரி) 7. திரு. எஸ். தில்லைநாதர் (ஊர்காவற்றுறை), 8 திரு. எம். சிவஞானசுந்தரம் (வட்டுக்கோட்டை).

(5-ம் பக்கம் பார்க்க)

சோஷலிச முன்னணி பட்டியல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட அபிவிருத்திச்சபைக்கான சோஷலிச முன்னணி பட்டியலில் முன்னாள் தபால் அமைச்சர் திரு. செ. குமாரசூரியர் இன்று காலை தாக்கலசெய்வார்.

சோஷலிச முன்னணிபட்டியல் நேற்று வெளியிடப்பட்டது; 1. செ. குமாரசூரியர் (வட்டுக்கோட்டை) 2 கே. எஸ். ஆறுமுகம் (யாழ்ப்பாணம்), 3. ஐ.சபாபதிப்பிள்ளை (ஊர்காவற்றுறை) 4 சி அ. அருளப்பு (கிளிநொச்சி), 5 பிரான்சிஸ் சேவியர் (கிளிநொச்சி), 6. வே. நடராசா-நல்லூர், 7. க பரமநாதன், 8. டாக்டர் எம்.பாலகிட்ணர், 9. கே. தவராசா-யாழ்ப்பாணம். 10 எஸ் வல்லிபுரம ஆச்சாரி, 11 சி பாலகிட்ணர்-பருத்தித்துறை, 12 எஸ் கனகசபை-வட்டுக்கோட்டை, 13 கி சற்குணம்-நல்லூர், 14. வி எஸ் இராசரத்தனம்-கிளிநொச்சி ஆகியோர் காங்கிரசுடன், சோஷலிச முன்னணியும் இன்று வேட்புமனுக்களை தாக்கல் செய்யும்.

பல்கலைக்கழகம் சென்ற மகன் எங்கே?

தந்தைக்கு ராணுவத்தில் சந்தேகம்

(பண்டத்தரிப்பு)

இரவு பத்து மணிக்கு மோட்டார் சைக்கிளில் பல்கலைக்கழகம் விடுதிக்குச் சென்ற தமது மகனைக் காணவில்லை என்றும் இவரை இராணுவத்தினர் கைது செய்திருக்கலாம் என்று தாம் சந்தேகப்படுவதாகவும் மாதகல் மேற்கைச் சேர்ந்த ஒருவர் சங்கானைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருக்கின்றார்.

யாழ். பல்கலைக்கழக மாணவரான தமது மகன் விமலராசா (24 வயது) கடந்த இரவு 10 மணியளவில். மாதகலிலுள்ள வீட்டிலிருந்து மோட்டார் சைக்கிளில் பல்கலைக்கழக விடுதிக்குச் சென்றதாகக் கூறிவிட்டுச்சென்றார் என்றும் அவரைப் பின்பு காணவில்லை என்றும், அவரை இராணுவத்தினர் கைது செய்து கூட்டிச் சென்றிருக்கலாம் என்று தாம் சந்தேகப்படுவதாகவும் முறைப்பாட்டுக்காரரான முருகேசு அப்புலிங்கம் தமது புகாரில் தெரிவித்துள்ளார். (அ)

'பிலியட்ஸ்'லாபீர்காலமானார்

(கொழும்பு)

முன்னாள் உலக பிலியட்ஸ் சம்பியன் ஜனாப் எம். ஜி. எம். லாபீர் (51வயது) நேற்று காலமானார்.

இலங்கையின் தலைசிறந்த பிலியட்ஸ் வீரரான ஜனாப் லாபீர், 1973ல்- பம்பாயில் நடைபெற்ற உலகக்கிண்ணப் போட்டியில் இந்தியவீரரைத் தோற்கடித்து உலக பிலியட்ஸ் சாம்பியனானார். இதற்குமுன்னர் 1967ல் கொழும்பில் நடைபெற்றகிண்ணப்போட்டியில் 2வது இடத்தையும் 1969ல் இந்தியாவில் நடைபெற்ற உலகக்கிண்ணப் போட்டியில் 2வது இடத்தையும் இவர் பெற்றிருந்தார். இலங்கையில் 15 தடவைகள் சம்பியனான ஜனாப் லாபீர் இந்தியாவில் எட்டுத் தடவைகளில் அகில இந்திய தேசியவீரர்களைப் பெற்றிருந்தார்.

பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வநாயகத்தின் நினைவுதினத்தையொட்டி நேற்று மாலை நினைவுஸ்தூபி முன்பாக மௌனப் பிரார்த்தனை நடைபெற்றது.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ அமிர்தலிங்கம், நல்லூர் எம். பி திரு. மு. சிவசிதம்பரம் ஊர்காவற்றுறை எம். பி திரு. கா. பொ. இரத்தினம், மற்றும் மாநகர சபை உறுப்பினர்கள், இளைஞர் பேரவை, மகளிர் பேரவையினர் இதில் பங்குபற்றினர்கள்.

தமிழ்காங்கிரஸ்

கொழும்பிலும் போட்டி

(யாழ்ப்பாணம்)

தமிழ்காங்கிரஸ் கொழும்பு மாவட்டத்திலும் போட்டியிடுகிறது. சட்டத்தரணி எஸ் தேவராசன் கொழும்பு மாவட்ட பட்டியலில் இன்று தாக்கல்செய்வார்.

தமிழ்காங்கிரஸ் முல்லைத்தீவு மன்னார் பட்டியலும் இன்று காலை தாக்கல்செய்யப்படும்.

தமிழ் காங்கிரஸ் பிரசார செயலாளர் திரு. மாணிக்கசோதி. தமிழ்காங்கிரஸ் வாலிபமுன்னணி தலைவர் திரு திரு. ஈ ஏ ஆனந்தராசா ஆகியோர் நேற்று முல்லைத்தீவு சென்றுள்ளனர். யாழ் மாநகர சபை தமிழ்காங்கிரஸ் உறுப்பினர் திரு மரியாம்பிள்ளை, திரு சுப்பிரமணியம் ஆகியோர் நேற்றுமாலை மன்னார் சென்றுள்ளனர். (ச)

யாழ். மாவட்ட வேட்பாளர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபைக்கான தமிழ்க் காங்கிரஸ் பட்டியலில், தமிழ்க்காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் நேற்று வெளியிட்டார்.

(1) சட்டத்தரணி குமார் பொன்னம்பலம் (தமிழ்க்காங்கிரஸ் பொதுச்செயலாளர், யாழ்ப்பாணம்), (2) சட்டத்தரணி ஆர் ஜே. செல்வராஜினம் (காங்கேசன்துறை), (3 எஸ் நில்கிரிற்றம்பலம் (கோப்பாய்), 4 எஸ். துரைரசா (கல்லூரி அதிபர் சாவகச்சேரி) (5) எஸ். சதாசிவம் (ஊர்காவற்றுறை), (6 விஸ்வலிங்கம்போல் பருத்தித்துறை, (7) ஜி. ஆனந்தராஜன் (வட்டுக்கோட்டை) (8) தர. மகேந்திரராசா (தமிழ்காங்கிரஸ் இணைச்செயலாளர் நல்லூர்), (9) பொ. சிறிதரன்

(6-ம் பக்கம் பார்க்க)

"யாழ். இளைஞர்களை யார் கைது செய்கின்றார்கள்?"

விபரம் தெரியவில்லை என்று ஜனதிபதிக்கு 'சிவா' தந்தி

(யாழ்ப்பாணம்)

"யாழ்ப்பாணத்திலுள்ள இளைஞர்கள் திடீர்திடீரெனக் கைதுசெய்யப்படுகின்றார்கள் யார் இளைஞர்களைக் கைதுசெய்கின்றார்கள் என்பதும் கைதுசெய்பவர்கள் எங்கே கொண்டுசெல்கின்றார்கள் என்பதும் தெரியாமல் இருக்கின்றது"

ஜனதிபதி திரு. ஜே. ஆர். வைத்துள்ள அமைச்சரத்தந்தியில் ஜயவர்த்தனவுக்கு நல்லூர் மேற்கண்டவாறு கேள்வி எம். பி திரு எம். சிவசிதம் உழுப்பியுள்ளார்.

பரம் நேற்றுக்காலை அனுப்பி இளைஞர்கள் கைதுசெய்யப்படுவதால் மக்கள் பீதியடைந்துள்ளனர். கைதுசெய்தவர்களைப் பற்றி யாழ் பொலிசாரைக் கேட்டால் தங்களுக்கு ஒன்றும் தெரியாது என்று சொல்லுகின்றார்கள் ஆகையினால் கைதுசெய்யும்போது யார் கைதுசெய்கின்றார்கள், எங்கே கொண்டுசெல்கின்றார்கள் என்ற விபரத்தை தெரிவிக்கும்படி ஆபுதப்படையினரை பணிக்கவும்"

இவ்வாறு ஜனதிபதி ஜே ஆர். ஜயவர்த்தனவுக்கு நல்லூர் எம் பி திரு மு. சிவசிதம்பரம் தமது தந்தியில் கோரியுள்ளார். (சி-ஈ)

வரிவிளம்பரம்

விற்பனைக்கு

கலப்பற்ற முதல்தரமான அல்ஷேஸன் குட்டிகள்—நாலு கிழமை—பூச்சிமருந்து கொடுக்கப்பட்டது. விபரம்: ஆறுகால் மடம் முன் இருக்கும் சங்கக் கடையுடன் சேர்ந்த வீடு L சேவியர், ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை. 8977

கோழி இறைச்சி யாழ். ராஜா ஹோட்டலில் பெர்முக் கொள்ளலாம் மனேஜருடன் தொடர்பு கொள்ளவும். 8982

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் 182/2 இலக்கத்தில் ஒரு பரப்புக்காணி விற்பனைக்குண்டு. விபரம் நல்லையா மாஸ்டரி 4 Brown Road, Jaffna. 8991

தேவை

ஆமணக்கு கொட்டை தொகையாக தேவை. கிலோ 4/-ரூபாவாக வாங்கிக் கொள்ளும். P. M நாகரட்ணம் செட்டியார், 15/17, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 8972

கடைச்சல் தொழிற்சாலையில் சேரும் பித்தளைத்துள் கிலோ 15/- கிலைக்கு வாங்கிக் கொள்ளப்படும். மனேஜர் ஸ்டோர், 15/17, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம். 8973

யாழ். நகரில் பிரபல புடவைக்கடைக்கு அனுபவமுள்ள விற்பனையாள தேவை. உமைல் சுற்றாடலில் வசிப்பவர் விரும்பத்தக்கது. 3-5-81க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 8981, C/o, ஈழநாடு, யாழ்ப்பாணம். 8981

கைத்தறி நெசவு ஜவுளி வகை உற்பத்தியாளர்கள் தாங்கள் நெசவு செய்த ஜவுளிகளை பெறுமதியான விலைகளில் எம்மிடம் விற்பனை செய்யலாம். S R. செல்லத்துரை 216, K K S. ரோட், யாழ்ப்பாணம். போன் :- (296) 8986

தவறிவிட்டது

தவபாலசந்திரன் என்பவருடைய கார் லைசென்ஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து லட்சுமி ரேட்ஸ், கொக்குவில் சந்தியில் ஒப்படைக்கவும், சன்மானம் வழங்கப்படும். லட்சுமி ரேட்ஸ், கொக்குவில் சந்தி. 8974

கல்வி

முற்றிலும் புதிய நிருவாகத்தின் கீழ் இயங்கும் எமது தொழில் பயிற்சி நிறுவனத்தில் குறுகியகால 'ஷோர்ட் டேர்ம்' பயிற்சி நெறிக்கு மாணவர்கள் சேர்க்கப் படுகிறார்கள். முழுநேரபயிற்சிகளும் காலை, மாலை, வாரஇறுதி வகுப்புக்களும் உண்டு விபரங்கட்கு ஐ ஏ ஆர், 615, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 8949

ஆண்டு விழா

(மன்னார்)

மன்னார் விநாயகர் மறுமலர்ச்சி மன்றத்தின் 3வது ஆண்டுவிழா மே மாதம் 16ம் திகதி நடைபெறவிருக்கிறது.

மன்னார் சித்திவிநாயகர் மகா வித்தியாலய மண்டபத்தில் திரு. ஜெயபாலசிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கிறது. (ஈ)

நினைவாஞ்சலி

இரண்டாம் ஆண்டு

மகேசன் வரதராஜன்

நவாலி

ஜெனனம்: 21-4-1950

மறைவு: 27-4-1979

நினைவு கூருபவர்கள்:

அல்பு மனைவி, மகள், தந்தை, சகோதரர்கள், சகோதரிகள், மைத்துனர்கள்

(8970)

நயினாதீவு கிராமசபை நூல்நிலையப் பரிசாரகர் பதவிக்கான தெரிவிடம்

21-4-81ம் திகதிய 'ஈழநாடு' பத்திரிகை விளம்பரத்தற்கு கீழ்க்காணும் திருத்தம் செய்யப்படுகின்றது. விண்ணப்பதாரிகள் தமிழ் மொழியில் சேட சித்தி பெற்றிருத்தல் வேண்டுமென்பது தகைமை சித்தியாக மாற்றப்பட்டுள்ளது. மேலதிக தகைமை சித்திகளுக்கும் தராதாங்களுக்கும் மேலதிக புள்ளிகள் கொடுக்கப்படும்.

க. பரமலிங்கம்
விசேடஆணையாளர்,
நயினாதீவு - கிராமசபை. 8979

நியமனம்

(மாவிட்டபுரம்)

கீரிமலை கமநல சேவை நிலைய பிரிவுக்குட்பட்ட காங்கேசன்துறை கிராமத்திற்கு கமகாரர் பிரதிநிதியாக திரு. ராசா மோசஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (அ)

காணாமல் போனயுவதி இரட்சண்ய சேனையில் வாலிபர் பிணையில் சென்றார்

(மாவிட்டபுரம்)

திருமண வயதையடையும் திருமணம் செய்யப்போவதாக அடம்பிடித்த 14 வயது யுவதி ஒருவர் கைதடி இரட்சணிய சேனையில் சேர்க்கப்பட்டார். அவரது காதலரான 22 வயது வாலிபர் 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

வீமன்காமம் என்னுமிடத்தைச் சேர்ந்த 14 வயதான சுதாகரவேலு தோணிலவரி என்ற யுவதியையும், செல்லன் மகேசன் என்ற 22 வது வாலிபரையும் காங்கேசன்துறைப் பொலிசார் மல்லாகம் பதில் நீதி திருமதி தப்பிரதினம் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

இவர்களிருவரும் வீட்டினிருந்து காணாமல் போனது தொடர்பாகச் செய்யப்பட்ட புகாரின் பேரில் இவர்களைத் தேடிய போது இருவரும் பொகிலில் சரணடைந்ததாகவும் இவர்கள் திருமணம் செய்ய விரும்புவதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

பதில் நீதிபதி யுவதியிடம் விசாரித்தபோது தான் தனது காதலனோடு செல்லப்போவதாகத் தெரிவித்தார்.

பதில் நீதிபதி இவரை கைதடி இரட்சணிய சேனையில் மே மாதம் 6ம் திகதி வரை அனுமதித்து மனம் மாறும் பட்சத்தில் பெற்றோரிடம் செல்ல அனுமதிக்குமாறும் வாலிபரை 1000 ரூபா பிணையில் செல்லுமாறும் உத்தரவிட்டார். (அ)

16 வயதில்

மதுவுக்கு அடிமையானவர் நஞ்சருந்தித் தற்கொலை

(மாவிட்டபுரம்)

குடும்பச் சுமையின் தாக்கம் காரணமாக அண்ணனின் வழிகாட்டல் பற்றி தம்பியும் நஞ்சருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

சுன்னாகம் வாசியான கந்தசாமி இராஜேந்திரம் (16வயது) என்பவரே இவ்வித முடிவைத் தேடிக் கொண்டவராவார்.

இவருக்கு குடும்பப் பொறுப்புக்கள் அதிகம் இருந்ததாகவும், அத்துடன் மது அருந்தும் பழக்கம் இருந்ததாகவும், சம்பவதினம் காலையில் வேலைக்குப் போய்விட்டு பகல் 1-30 மணிக்கு வீட்டுக்கு வந்ததாகவும், அச்சமயம் அவர் மது அருந்தியதைக் கண்ட தாயார் சரஸ்வதி, குடும்பப் பொறுப்பை மறந்து மது அருந்தலாமா என இவரை ஏசியதாகவும் அதனால் மனமுடைந்து திரும்பிச்சென்ற இவர், பின் நஞ்சருந்திவிட்டு வந்ததாகவும் உடன் தெல்லிப்பளை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்ற போது அங்கு மரணமானதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது

இவரது தமையன் 8 மாதங்களுக்கு முன்னர் நஞ்சருந்தி மரணமானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

திடீர் மரண விசாரணை அதிகாரி திரு நா. தயாபரராசா இம்மரணம்குறித்து விசாரணை நடத்தி சாட்சியங்களையெடுத்து தற்கொலை எனத்தீர்ப்பளித்தார்.

சுன்னாகம் பொலிஸ் கான்ஸ்டபிள் தவராஜா சாட்சிகளை ஆஜர் செய்தார்.

45,168 உல்லாசப் பயணிகள்!

(கொழும்பு)

இலங்கையில் வெளி நாட்டு உல்லாசப் பயணிகள் வருகையில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதத்தில் 45,168 உல்லாசப் பயணிகள் இலங்கைக்கு வந்திருந்தார்கள் என இலங்கை உல்லாசப் பயணிகள் சபையின் புள்ளி விபரத்திலிருந்து தெரியருகிறது. (தி-மி)

உல்லாசப்பயண

யுவதியின் பணம் திருட்டு

(மன்னார்)

நேர்வே நாட்டு உல்லாசப் பயணியின் 9 ஆயிரம்ரூபாவும், வேறு சில பொருட்களும் திருடப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது

தலைமன்னார் வழியாக இந்தியா செல்லவென தலைமன்னாருக்கு வந்திருந்த நோர்வே உல்லாசப் பயணியான லீ என்ற 18 வயது யுவதி 9 ஆயிரம் ரூபாவையும் வேறு சில பொருட்களையும் கரையில் வைத்து விட்டுக் கடலில் குளித்துக் கொண்டிருந்தார் அச்சமயம் அங்கவந்த இளைஞர் ஒருவர் உல்லாசப் பயணியின் 9 ஆயிரம் ரூபாவையும், மற்றும் உடைமைகளையும் திருடிக் கொண்டு ஓடினராம்.

இதைக் கண்ட கிராமத்து மக்கள் திருடனைத் துரத்திச் சென்றனர் திருடன் உடமைகளைப்போட்டுவிட்டு 9 ஆயிரம் ரூபாவுடன் காட்டுவழியாக மறைந்து விட்டான்.

தலைமன்னார் கிராமப்புற கடற்கரையில் நடந்த இச் சம்பவத்தில் பணத்தையும் பொருட்களையும் திருடியவர் வெளியூர் இளைஞன் எனவும் இந்த உல்லாசப் பயணியைப் பின்தொடர்ந்து வந்து திருடியதாகவும் நம்பப்படுகிறது

உல்லாசப் பயணி உடனடியாகக் கப்பலில் செல்லவேண்டியிருந்ததால் இச்சம்பவம் பற்றிப் பொலிஸில் புகார் செய்யப்படவில்லை. (ஈ)

அ. செ. மு. நிதி

ஏற்கனவே சேர்ந்துள்ள தொகை.	65-00
மௌபதிராசன், பார்மோவாஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்.	10-00
எம். ஓ எம். சுவாமிநாதன், பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.	10-00
கனக. சுகுமார், 16, சோமசுந்தரம் ஒழுங்கை, சுண்டிக்குளி.	25-00

பதவி வெற்றிடம்

1. பொது எழுதுநர் தரம் 111
2. காரியாலய சேவகர்/விற்பனையாளர்

1. பொது எழுதுநர் தரம் 111

(அ) தகைமைகள்

க. பொ. த. ப (சாதாரணம்) பரீட்சையில் 6 பாடங்களில் சித்தி எண்கணிதம்/கணிதம்/வர்த்தக எண்கணிதம், தமிழ் மொழி உட்பட 3 பாடங்களில் திறமைச் சித்தி.

கூட்டுறவுப்பயிற்சி தராதரப் பத்திரமும், தமிழ் தட்டெழுத்துப் பயிற்சியும் மேலதிக தகைமையாகக் கருதப்படும்

(ஆ) சம்பளம்:-

195 — 345

10X10 — 12 50X4ம் விசேட படிகளும்

(இ) விண்ணப்ப முடிவு திகதியில் 18 வயதுக்கு உட்படாமலும், 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

2. வெற்றிடம் - காரியாலய சேவகர்/விற்பனையாளர்

(அ) தகைமைகள்

8-ம் தரக் கல்வி சித்தி

(ஆ) சம்பளம்

180 — 285

7 50 X 14 விசேட படிகளும்

3. விண்ணப்ப முடிவு திகதி 09-05-1981

4. குறிப்பு:-

விண்ணப்பம் யாவும் சொந்தக் கையெழுத்தினால் தயாரிக்கப்பட்டு பூர்த்தியாக்கப்பட்டு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:

பொதுமுகாமையாளர்,

கோண்டாவில் — இணுவில்

தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்,

இணுவில்.

(8985)

கலா ரசிகர்களுக்கு சந்தர்ப்பம்!

தென்னிந்திய திரைப்பட நாட்டிய தாரகை

குமாரி லதா குழுவினரின்

நாட்டிய மாலிகா நிகழ்ச்சி

இன்று (27-04-81) மாலை 6-30 மணிக்கு

யாழ். வீரசிங்கம் மண்டபம்

நுழைவு: 50/-, 25/, 10/-

பட்டாக்கத்திபைரவன்புகழ்

ஜெய்கணேஷ்

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார். (8992)

அடைவுகடை அறிவித்தல்

அடைவு கடைகளுக்கான வரி விகிதத்தையும் வட்டி விகிதத்தையும் அரசாங்கம் அதிகரித்திருப்பதின் காரணமாக நாம் எமது அடைவு கடைகளை நடத்த முடியாதிருப்பதனால் அடைவு பிடிப்பதை 1-4-81லிருந்து நிறுத்தியுள்ளோம்.

தயவு செய்து மேற்படி ஸ்தாபனத்தில் அடைவு வைத்திருக்கும் எமது வாடிக்கையாளர்கள் தமது நகைகளை 30-6-81க்குள் மீட்டுக்கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இப டிக்கு

பொ. கந்தையா,

உரிமையாளர்.

இராஜலக்ஷ்மி ஸ்ரோர்ஸ், 230, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். (8978)

மணிவாக்கு

பகுத்தறிவு உன்னை ஆளட்டும் ஆனால் பசி உனக்கு அடிமையாயிரு கட்டும்.

—திருவிருந்து

நமது நோக்கு

பொதுவுடைமை

யாழ்ப்பாண மக்கள் டாக்டர் விக்கிரமசிங்கா அவர்களின் 80 வது பிறந்ததின விழாவை மிகச்சிறப்பாகக் கொண்டாடியது மிகப் பொருத்தமானது.

பெருந்திரளான மக்கள், பொன்னுடை மலரிமாலை, கருத்துச்செறிந்த புகழ் மாலை- இவையாவும் இலங்கையின் முதுபெரும் இடதுசாரித் தலைவருக்கு, பொதுவுடைமை இலட்சிய வாதிக்கு- தேசிய வாதிக்கு யாழ்ப்பாண மக்களின் உருக்கமான காணிக்கையெனலாம்.

இந்த வைபவத்தின் இன்னொரு கருத்து, இன்றைய அரசியல் நிலைமைக்கும் தொடர்புடையதாகும்.

ஐம்பதுவருடங்களுக்குமுன் பொதுவுடைமைக் கொள்கையை பரப்பும் பணியில் ஈடுபட்ட டாக்டர், இன்று நாடு கண்ட முன்னேற்றத்தில் திருப்தியடைவாரா?

அன்று அடிமை வாழ்வினிருந்த இந்நாடு, இந்த 50 ஆண்டுகாலத்தில் பல முன்னேற்றப்படிகளைத் தாண்டி விட்டது உண்மை. இதற்கு நாட்டின் இடதுசாரி இயக்கம் ஏதுவாக இருந்ததை எவரும் ஆட்சேபிக்கத் துணியார்.

முன்னேற்றம் பொதுவுடைமைப் பாதையில் தொடர்கிறதா?

நாட்டில் பசியும், பிணியும், வறுமையும் இல்லாத சமுதாயம் உருவாகின்றதா?

விஞ்ஞான ரீதியில் சோஷலிசம் ஆட்சிமுறையில் ஸ்திரமான இடம் பெற்றுள், இன்று நாமிந்த இலக்குகளுக்கு ஆளாகவேண்டிய நிலையில்லை.

எனவே பொதுவுடைமைக் கொள்கை சுமார் 50 வருடங்களாக இங்கு வேரூன்றி வளர்ந்து காய்த்துக் கனிபரவி மக்களுக்கு உதவும் நிலையிலிருக்கவில்லை என்பது புலனாகின்றது.

பொதுவுடைமையென்பது ஒரு பொருளாதார நெறி மட்டுமல்ல; அது எங்கள் சமய சமூதாய அறநெறியின் முதுகெலும்பெனலாம்; மேற்கத்திய அறிவு நெறி மட்டுமல்ல!

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூற்பயன் தொகுத்தவற்றுள்ளலாந் தன்மை"

பகுத்துண்டு பல்லுயிரோம்பும் பண்பு பண்டைக் காலத்திலிருந்தே சிறப்புற நமது சமுதாயத்தில் நிலவியிருந்தது.

காலப்போக்கில் முதலாளித்துவ மனப்பான்மை படைத்தவர் ஆசைக்கு அணைகட்ட முடியாத நிலையில், தேவைக்கு மேலான பெரும் பொருள்களைப் பதுக்கி வந்தனர்.

மனிதசமூகத்திலிருந்து துரோகமானதும், பிறருடைய வாழ்வைப் பாதிப்பதுமான இச்செயலை அற்றிவிடும் அரசியல் அமைப்பு அத்தியாவசியமானது.

இலங்கை ஒரு சோஷலிச ஜனநாயக நாடு என்பதே பேர்; இன்று ஆடம்பர வாழ்க்கை அதிகரித்து வருகிறது; வியாபாரத்தில் கொள்ளை லாபம்; விலை பொருள்கள் பதுக்கிவைக்கப்படுகின்றன; நாளிரவு விலையேற்றம் அமுலாவதும் பொருட்கள் வெளிவருகின்றன.

சமயம்வேறு; வாழ்க்கை வேறல்ல. இந்த உண்மையைப் பரிசோதனையிலும் ஆராய்ச்சியாலும் நடைமுறைப்படுத்த முடியுமானால் இந்நாட்டுக்குரிய பொதுவுடைமை வாழ்வு செயல்வாத முறையில் தெளிவடையும்.

1951ல் ஐ. தே. கட்சி ஆட்சியில் பிரிவேதிபட்ட காலத்தில் முதலாளித்துவ கொள்கைக்கு நேர்மாறான பொதுவுடைமைக் கொள்கை நாட்டின் தேசிய பண்பாட்டுக்கமைந்த வகையில் தொழிற்பட்டிருந்தால் முதலாளித்துவ வகுப்பு ஒரு பொடுமையான நாடு ஆகியிருக்காது.

இன்று இடதுசாரிக்கட்சிகளே பெருகிவருவதானால் முதலாளித்துவம் நாட்டை விட்டகல்வ தெங்ஙனம்?

"திருமலைத் துறைமுகத்தை அந்நியர்க்குத் தாரைவார்க்க தமிழினம் அனுமதிக்காது"

டாக்டர் 'விக்கி' பிறந்ததினவிழாவில் 'அமிர்'

(யாழ்ப்பாணம்)

"திருகோணமலைத் துறைமுகத்தை வெளிநாட்டவருக்கு எந்தவித உபயோகத்திற்கும் தாரைவார்க்கும் முயற்சியை தமிழ்பேசும் மக்கள் விட்டுக் கொடுக்கமாட்டார்கள் என்பதை வடக்கு கிழக்குப் பிரதிநிதித்துவப்படுத்துகிறவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்."

யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த டாக்டர் விக்கிரமசிங்காவின் 80 வது பிறந்ததின விழாவில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. விக்கிரமசிங்கா, மாணிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் ஆகியோரும் வந்திருந்தனர்.

திரு. அ. அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது; திருமலையை தாரைவார்ப்பதால் மிக மோசமான ஆபத்தை அவதானிக்க முடியதாயிருக்கிறது. இலங்கை அரசு அணிசேரா இயக்கம் என பேச்சளவில் கூறிக்கொண்டு ஏகாதிபத்திய வாதிகள் பக்கம் இறுக்கமாகச் சென்று கொண்டிருக்கிறது.

அன்றைய ஆட்சியில் மக்கள் படும் அவஸ்தையை தலைவர் இங்கு குறிப்பிட்டார். இன்று கூட என் தொகுதியில் இராணுவத்தினர் செய்த அனர்த்தங்களை நேரில் பார்த்துவிட்டு வருகிறேன். அதனால்தான் இங்குவர தாமதம் ஏற்பட்டது.

மிகவும் முக்கியமானவர்

டாக்டர் விக்கிரமசிங்காவை தமிழ் மக்கள் விழா எடுத்துப் பாராட்டுவதற்கு மிகவும் பொருத்தமானவராக இருக்கிறார். தமிழ் மக்களின் வாழ்வில் இவர் பல சந்தர்ப்பங்களில் பக்க பலமாக நின்றிருக்கிறார்.

முதன் முதல் எனது 13 வயதில் மாணவனாக இருந்த போது அவர் யாழ் வாலிபர் மாநாட்டிற்கு வந்த சமயம் அவரைப் பார்த்து அவர் பேச்சைக் கேட்டேன்.

அடக்கமும், அமைதியான சுபாவமும், ஆழ்ந்த சிந்தனையும், ஒரே நிலையாக நிற்கும் தன்மையும் கொண்டவர் டாக்டர் விக்கிரமசிங்கா.

டாக்டர் என். எம்., பிலிப் குணவர்தனவுடன் தொடர்பு ஏற்பட்ட சமயம், டாக்டர் விக்கிரமசிங்காவுடன் பழக, நெருங்கிய வாய்ப்புக் கிடைத்தது. 56-ம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலுக்கு நான் தெரிவுசெய்யப்பட்டுச் சென்ற சமயம், அவருடன் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. அவரின் குணாதிசயங்களை அறியும் சந்தர்ப்பம் கிடைத்தது.

40 ஆண்டுகளுக்கு முன் கூறியவை

40 ஆண்டுகளுக்கு முன் டாக்டர் விக்கிரமசிங்கா எடுத்துக் கூறியவை, எவ்வளவுதூரம் சரியென்பதை இன்றைய நிலைமைகள் எடுத்துக்காட்டுகின்றன.

சமதர்ம சோஷலிசம்

உலகில் இன்று சமதர்ம சோஷலிசம் பரவி வருகின்றது. இன்று உலகெங்கும் பெரிய நெருக்கடி உருவாகி வருகிறது. ஒரு புறம் முதலாளித்துவ வாதிகளின் மிகப்பெரிய நெருக்கடி, உரிமை கோரும் தொழிலாளரை ஒடுக்குவதற்கு, மக்களை திசை திருப்புவதற்காக, யுத்த ஆயத்தங்களைப் பல்வேறு வழிகளில் செய்து வருகின்றனர். இந்தச் சூழ்நிலையில் சமாதான சமதர்ம உலகில் அடிமைப்பட்ட இனங்கள், விடுதலை கோரும் மக்கள் சோஷலிச நாடுகள் பக்கமே இருக்கிறார்கள்.

சோஷலிசம் எனக் கூறிக் கொண்டு, அதில் இறுக்கமாக நிற்பது அவரின் அரசியல் ஞான முதிர்ச்சியைக் காட்டுகின்றது.

அன்றுள்ள நிலைமை

56-ம் ஆண்டு காலிமுகத் திடலில் சத்தியாக்கிரகம் செய்த தமிழ் மக்கள் தாக்கப் பட்டனர். நான் தெற்றியால் இரத்தம் வழிந்தோடும் நிலையில் பாராளுமன்றம் சென்றேன். பெரும் பதட்ட நிலை இருந்தது. அந்நேரத்தில் நாங்கள் மட்டுமன்றி, கம்யூனிஸ்ட் கட்சி, சமசமாஜக் கட்சி உறுப்பினர்களும் வெளியில் செல்ல முடியாத நிலைமை இருந்தது. நாங்கள் சபாநாயகர் அறையில் தங்கி, பொலிஸ் பாதுகாப்புடன் எங்கள் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டோம். தமிழினத்தின் நலனில் அக்கறை கொண்ட டாக்டர் விக்கிரமசிங்காவிற்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

எந்தக் கட்டத்திலும் அவர் சரியான பாதையைவிட்டு விலகவில்லை.

கட்சிக்குள்ளேயே அவர் உட்கட்சிப் போராட்டம் ஆரம்பித்து, முதிர்ந்த அனுபவம் பெற்றவர் அவர். அடிமைப் பட்டிருக்கும் எமக்கு அவருடைய சேவை இன்னும் தேவை. (க)

மக்கள் கருத்து

சிந்திக்கவேண்டிய கருத்து

22-4-81ல் 'சமநாடு' தமிழில் வெளிவந்த சோஷலிசம்பற்றிய ஆசிரியத் தலையங்கம் ஆழ்ந்து படித்துச் சிந்திக்க வேண்டியது. மேற்கத்திய, ரஷ்ய சோஷலிசம் மனிதனின் புற உலகை, புறச் சுற்றுடலைத் திருத்தி அமைக்கும் கொள்கையளவில் நின்றுவிட்டது. தத்துவமேதை கிருஷ்ணமூர்த்தி கூறுகிறார். ("Environmental development without inner transformation cannot lead to abiding progress of man") அவரவர் வாழ்க்கையைத் திருத்தி அமையாமல் புறவுலகத்தில் நிலையான மேம்பாட்டை அடைய முடியாது என்பதாகும். இதுதான் இந்து மத சமயத் தத்துவமும். இக்கருத்தைத்தான் ஜவஹர்லால் நேரு அறிவதற்கு காலம் எடாது என்று மகாத்மா காந்தி சொன்னார். மகாத்மாகாந்தி சோஷலிசக் கொள்கையில் புரட்சிவாதியென்பதை அவருடைய வாழ்வு காட்டிவிட்டது. அவரவாழ்விற்கிசைய அவருடைய புறவாழ்வு அமைந்தது

தா. காசிப்பிள்ளை

தென்மூலை.
கரவெட்டி.

இன்று மக்கள் நிலை மிகமிக மோசம்!

— டாக்டர் 'விக்கி'

(யாழ்ப்பாணம்)

"அரசியலில் நான் பிரவேசித்த காலம் பொருளாதாரத்திலும் அரசியல் துறையிலும் மக்கள் மிக மோசமான நிலையில் இருந்தகாலம் அந்தக்காலத்திலும் பார்க்க இன்று மக்கள் மிகவும் மோசமாக இருக்கிறார்கள்."

டாக்டர் விக்கிரமசிங்கா தமது பிறந்ததினவிழாவில் நன்றி தெரிவித்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

திரு பொன். குமாரசாமி தலைமையில்நடந்த இக்கூட்டத்தில் டாக்டர் விக்கிரமசிங்கா மேலும் கூறியதாவது நான் விளம்பரத்தை விரும்புபவன் அல்ல நீங்கள் எனக்கு விழா எடுக்கின்றீர்கள். நான் செய்த சேவையை ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள் என்பதை இவ் விழா மூலம் உணர்கிறேன்.

டானமூர் சாசனம்

டானமூர் அரசியல் சாசனம் கொண்டுவரப்பட்ட காலத்தில் இங்கிலாந்தில் படித்துக் கொண்டிருந்தேன். அப்போது மாணவர் எல்லோரும் சேர்ந்து இந்த சாசனத்தை எதிர்த்து ஒரு பிரே

(5-ம் பக்கம் பார்க்க)

இன்று ஜயந்தி விழா

ஸ்ரீமௌனகுரு முருகப் பிள்ளை கடவுள் சுவாமிகளின் 76 வது ஜயந்திவிழா இன்று திங்கட்கிழமை தொண்டமானாறு செல்வச்சந்நிதியில் கொண்டாடப்படுகிறது. இவர் குருநாதசுவாமிகளின் பிரதம சீடர் என்பது குறிப்பிடத்தக்கது.

திறமைச்சித்தி

(பரந்தன்)

80ம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் கிளிநொச்சி செண்பகவிநாயகர் கல்லூரியைச்சேர்ந்த 9 மாணவிகள் சித்தியெய்தியுள்ளனர். இதில் 7 பேர் க.பொ.த. உயர்தரத்திற்குப் படிக்கத்தகுதி பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மீண்டும் வேலை

(மன்னார்)

சென்ற வருடம் வேலைநிறுத்தத்தின் போது ஈடுபட்டதால் வேலை நீக்கம் செய்யப்பட்ட பேசாலை கிராமாட்சி மன்ற எழுது வினைஞருக்கு மீண்டும் வேலை வழங்கப்பட்டுள்ளது. (ஈ

இடமாற்றம்

(மன்னார்)

முருங்கன் அரசினர் வைத்தியசாலை உதவி வைத்தியஅதிகாரி திரு. சிவபாதசுந்தரம் கிளிநொச்சித்தேவை வைத்தியசாலைக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவரது இடத்திற்கு நோப்பூர் உதவி வைத்தியஅதிகாரி டாக்டர் எஸ். திருநாவுக்கரசு நியமிக்கப்பட்டுள்ளார். (ஈ

"சர்வஜன வாக்குரிமையை

அன்று எதிர்த்தவர்கள் இன்று விழா எடுக்கிறார்கள்"

யாழ். நகரில் பீட்டர் கெனமன்

(யாழ்ப்பாணம்)

"சர்வஜனவாக்குரிமை 50 ஆண்டுவிழாவை இந்த அரசு கொண்டாட ஏற்பாடு செய்து வருகிறது. எலிஸபெத் மகாராணியையும், இங்கிலாந்துப் பிரதமரையும் இவ்விழாவிற்கு அழைக்க ஏற்பாடாகி வருகிறது இதே யூ என் பியை தஞ்சமை தாங்கிய அமரர் டி. எஸ் சேனநாயகா, பாரன் ஜெயதிலகா ஆகியோர் சர்வஜனவாக்குரிமையை 1930ம் ஆண்டு முழுமூச்சாக எதிர்த்தனர்."

டாக்டர் விக்கிரமசிங்கா பிறந்தநின விழாவில் பேசிய திரு பீட்டர் கெனமன் மேற்கண்டவாறு கூறினார்.

திரு பீட்டர் கெனமன் மேலும் கூறியதாவது: இதே யூ. என். பி ஆட்சிதான் 1948ம் ஆண்டு இந்தியர் வாக்குரிமையைப் பறித்தது சர்வஜன வாக்குரிமையைக் கொண்டாடும் இதே யூ என். பி 1947ல் சோல்பரி அரசியல் திட்டத்தில் டாக்டர் விக்கிரமசிங்காவின் வாக்குரிமையைப் பறித்து, 7 ஆண்டுகள் அவரைப் பாராளுமன்றம் செல்லாமல் தடுப்பதற்கான விதிகளைச் சேர்க்க முன்னின்றது.

யூ என். பி. எதிர்த்தது

1954 ம் ஆண்டு 18 வயதிற்கு மேற்பட்ட இளைஞர்களுக்கு வாக்குரிமையளிக்க வேண்டும் என்று ஒரு பிரேரணையை நான் பாராளுமன்றத்தில் கொண்டுவந்தபோது 'இதே யூ என் பிதான் இதனைப் பலமாக எதிர்த்தது. 'இது குரங்கின்கையில் பூமாலையைக் கொடுப்பதற்குச் சமமாகும்' என்றது இன்று இதே யூ. என். பி. சர்வஜன வாக்குரிமைத் தினத்தை கொண்டாட முன்னிற்கிறது இன்று உள்ளூராட்சி மன்றங்களின் உரிமைகளைக் குறைத்து வாக்குரிமையைப்பறித்து மாவட்ட சபை மூலம் ஜனநாயகத்திற்கு அதிக அதிகாரம் கொடுத்துள்ளது

1937ம் ஆண்டு டாக்டர் விக்கிரமசிங்க வைச் சந்தித்தேன். மூன்று மாணவர்கள் அவரின் ஆலோசனைகளைப் பின்பற்றி நடத்துவந்துள்ளனர். ஒருவர் திரு. வைத்திலிங்கம், மற்றவர் அமரர் பொன். கந்தையா, மற்றவர் நான். நாங்கள் அவரை சந்திக்க முன்னரே அவர் அரசியலில் ஈடுபாடுடையவராக இருந்தார்.

உலக நீதியில்

உலக நீதியாகப் பார்த்தால் அக்காலம், மூதலாளித்துவ உற்பத்திக் காலமாகும். அரசாங்கம் ஊழியர்களை நீக்கிய காலம் அது. கேகேயிலாத் திண்டாட்டம் விஷம்போல் ஏறிய காலம் அது. தேயிலை உற்பத்தி குறைந்து, விற்பனையாகாமல் தேயிலை உரமாகப் பாவிக்கப்பட்ட காலம் அது. இக் காலத்தில்தான் நாட்டை அந்நியர் அபகரிக்க தீவிர எங்களை முயற்சி நடந்து கொண்டிருந்தது. அந்த நேரத்தில்தான் அரசியல் வெற்றிடம் உருவாக்கப்பட்டிருந்தது.

இங்குள்ள டி. எஸ். சேனநாயகா, பாரன் ஜெயதிலகா போன்றவர்கள் ஏகாதிபத்தியவாதிகளுடன் சமரசம் பேசி இணைந்து சென்று விமோசனம் பெறுவதுதான் ஒரேவழி என்று கூறிய காலம் அது.

புதியவழி காட்டினார்

தொழிற் சங்கங்களை வழி நடத்திய தொழிலாளர்களைக் காட்டிக் கொடுத்து முதலாளிகள் பக்கம் சேர்ந்தனர். தொழிலாளர் போராட்டங்கள் முறியடிக்கப்பட்டன. இந்த நேரத்தில் தான் இந் நாட்டு மக்களுக்கு புதிய வழியை டாக்டர் விக்கிரம சிங்கா ஆரம்பித்தார். இந் நாட்டிற்கு பூரண சுயராஜ்யம் வேண்டும் என்ற குரலையும் முதன் முதலில் எழுப்பினர். இந்நாட்டில் விஞ்ஞான சோஷலிச கருத்துக்களைப் புகுத்தினார். சோஷலிச அமைப்பு முறைம் வெளிநாடுகளின் தலையீட்டை இன ஒடுக்குமுறையை ஒழிக்க முடியும் என்றும் முதன்முதலாகக் கூறினார்.

சூரியமல் இயக்கம்

முதன்முதலாக நாட்டில் வாழ்வு கம்யூனிஸ்ட் கட்சியு ஏகாதிபத்திய வாதிகளை எதிர்த்து சூரியமல் இயக்கம் ஒன்றை ஆரம்பித்தார். இது பலபகுதிகளில் விஸ்தரிக்கப் பட்டது. இவ்வியக்கம் மாணவர் மத்தியில் பெரும் செல்வாக்கைப் பெற்றது. டாக்டருடன் பலர் சேர முன் வந்தார்கள். இந்த இயக்கத்தின் முதல் தலைவராக திருமதி விக்கிரமசிங்கா விளங்கினார். இதன் ஞாபகமாக மூத்த மகளுக்கு அப்பெயரைச் சூட்டியுள்ளார்.

1931-ம் ஆண்டு பொறவக்க தொகுதியில் போட்டியிட்டு இவர் பெரும் வெற்றி பெற்றார். சட்ட சபையில் ஏகாதிபத்தியவாதிகளையும் மூதலாளித்துவவாதிகளையும் எதிர்த்து குரல் எழுப்பினர்.

இன்றும் அதேநிலை

அன்று ஆயுதபலத்தடன் மக்களைக் கொடுமைப்படுத்தி வந்தனர். இன்றும் அதே நிலைமை இருந்துவருகிறது சமாதானமாக வாழ முடியாத நிலையிருக்கிறது.

இரண்டாவது சட்டசபைத் தேர்தலில், எல்லா முதலாளித்துவ சக்திகளும் ஒன்றுதிரண்டு அவரைத் தோற்கடித்தது. ஆனால் மீண்டும் உப-தேர்தலில் அமோக வெற்றி பெற்றார். வேறு வழியின்றி இரு தடவை அவரைச் சிறைக்கு அனுப்பினார்கள்.

எதிரிகளை ஒழிக்க

எதிரிகளை ஒழித்துக்கட்ட சட்டத்தைப் பாவிக்கும்முறை டி. எஸ். காலத்தில் ஆரம்பித்து, இன்று ஜே. ஆர். காலத்தில் பூரணத்துவம் பெற்றுள்ளது.

அவர் ஆட்சி மாற்றத்தில் உள்ளேயும் வெளியேயும் மக்களுக்காகப் போராடினார். டாக்டர் விக்கிரமசிங்காவின் கருத்தை ஏற்றிருந்தால், நாடு இன்று இந்த நிலைமைக்கு வந்திராது.

நீர் மின் சக்தி

நீர்த் தேக்கங்களில் நீரைச் சேர்த்து வைத்து மின் சக்தியை உற்பத்தி செய்ய வேண்டும் என்று அன்று டாக்டர் விக்கிரமசிங்கா கூறியபோது ஏளனம் செய்தார்கள். இன்று மின்தடை ஏற்படுகையில் அதை உணருகிறார்கள். இன்று மின் சக்திக்காக 34 கோடி ரூபா செலவிட்டு அதனைச் செயல்படுத்தி வருகின்றனர்.

டாக்டர் விக்கிரமசிங்காவின் பின்னிப் பிணைக்கப்பட்டு மக்களுடன் இணைக்கப்பட்டிருக்கிறது.

ஆராய்ந்து அறிந்தவர்

முன்னாள் சென்ட்டர் என் நடேசன் பேசுகையில் கூறியதாவது:

"டாக்டர் விக்கிரமசிங்கா சோஷலிசத்தை நன்கு ஆராய்ந்து சரி என அறிந்து கொண்டு தன் வாழ்க்கையில் அதனைக் கடைப் பிடித்தது மட்டுமன்றி மற்றவர்களையும் அவ்வழியில் செல்வதற்கு நம்பச் செய்தார்."

பேராசிரியர் சிவத்தம்பி பேசுகையில் கூறியதாவது:

டாக்டர் விக்கிரமசிங்காவின் இறப்பு, அவரது பாரியார் டொறின் விக்கிரமசிங்காவையும் சேரும். இருவரும் ஒரே கொள்கையுடையவர்களாக இருந்தனர். இவர்களின் திருமணம், அரசியல் சற்பு எனலாம் கூறலாம். டாக்டர் விக்கிரமசிங்கா மக்களின் நல்வாழ்விற்குப் பெரும் தொண்டாற்றினார்"

(க-அ)

ஜேர்மனியிலிருந்து

கணவனை எதிர்பார்த்தார்; சடலம்தான் வந்தது!

இளம் மனைவியின் துர்ப்பாக்கியம்

(யாழ்ப்பாணம்)

மேற்கு ஜேர்மனியிலிருந்து தமது கணவரின் வரவை இம் மாதம் இறுதியில் எதிர்பார்த்துக் கொண்டிருந்த இளம் மனைவி தமது கணவரின் சடலத்தை கையேற்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குள்ளாகினார்.

அனலைதீவைச் சேர்ந்த பொன்னம்பலம் முனி (வயது 32) மேற்கு ஜேர்மனியில் கார் விபத்தில் சிக்கி கோர மரணமானார்.

அன்னாரின் சடலம் செட்டிகுளத்திலுள்ள அவரது மனைவியின் இல்லத்திற்கு கொண்டு வரப்பட்டு நேற்றுமுன் தினம் தகனம் செய்யப்பட்டது.

முருங்கனில் காலரா!

இதுவரை 218 பேர் சிகிச்சை பெற்றனர்

(மன்னார்)

முருங்கன் பகுதிகளில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேருக்கு காலரா நோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த 5 பேரும் முருங்கன் அரசினர் வைத்திய சாலையில் காலரா நோய்க்கான சிகிச்சை பெற்று வருகின்றனர்.

முருங்கன் பகுதியில் இதுவரை 7 பேர் காலரா நோயினால் மரணமடைந்துள்ளனர். முருங்கன் அரசினர் வைத்திய சாலையில் இதுவரை 218 பேர் காலரா நோய்க்கான சிகிச்சை பெற்றுள்ளனர். தற்போது 9 பேர் மட்டுமே காலரா நோய்க்கான சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அதிகாரி ஒருவரும் சில தாதிமாரும் முருங்கன் அரசினர் வைத்தியசாலையில் காலரா நோய் தடுப்பு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளனர்

முருங்கன் பகுதி முழுவதும் காலரா நோய் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பொதுமக்கள் சுகாதாரத்தைப் பேணுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

"கப்பலில் இடம் தருக; இல்லையேல் உணவுதரவும்"

தலைமன்னாரில் உல்லாசப் பயணிகள் கோரிக்கை

(மன்னார்)

"கப்பலில் இடம் கிடைக்க வழிசெய்யவும் இல்லையேல் இடம் கிடைக்கும் வரை உணவு தரவும்."

இவ்வாறு கோரி சுமார் 50 உல்லாசப் பிரயாணிகள் (ஆண்களும், பெண்களும்) தலைமன்னார் பொலிஸில் முறையிட்டனர்.

கடந்த 18ம் திகதி தலைமன்னார் வழியாக இந்தியா செல்லவென தலைமன்னாரில் ஏராளமான உல்லாசப் பிரயாணிகள் காத்திருந்தனர். ஆனால் கப்பலில் இடம்கிடைக்காமலே அன்றைய தினம் மாலை விசேஷ கப்பல் சேவை ஒன்று நடத்தப்பட்டது. அக்கப்பலில் தமக்கு இடம் கிடைக்கும் என உல்லாசப் பிரயாணிகள் சந்தோஷமடைந்திருந்தனர். ஆனால் அக்கப்பலில் அவர்களுக்கு இடம்கிடைக்காவிட்டால் இதனால் விரக்தியடைந்த சுமார் 50 உல்லாசப் பயணிகள் தலைமன்னார் துறைமுகத்திலிருந்து ஒரு மைல் தூரத்தில் இருந்த பொலிஸ் நிலையத்திற்கு ஊர்வலமாகச் சென்றனர்.

பொலிஸ் நிலையத்தில் ஒழுங்கு செய்யவும் இல்லையேல் கப்பலில் இடம் கிடைக்கும் வரை எமக்கு உணவு தரவும். அதுவரை இப் பொலிஸ் நிலையத்தை விட்டுச் செல்ல மாட்டோம் எனக்கோரிக்கை விடுத்தனர்.

பொலிஸ் நிலையத்தை விட்டுச் செல்லாதிருந்த உல்லாசப் பயணிகள் ஒருவாறுசமாளித்து அனுப்பிவைக்கப்பட்டனர்.

(ம)

இலக்கணச்சுவாமிகள்

குருபூசை

(யாழ்ப்பாணம்)

இலக்கணச்சுவாமி எனும் ஸ்ரீ முத்துக் குமாரதம்பிரானின் குருபூசை இம் மாதம் 29ம்திகதி புதன்கிழமைகொண்டாடப்படுகிறது. (கு)

பாணவிடை

சிவன் தேர்த் திருவிழா

(புங்குடுதீவு

புங்குதீவு பாணவிடைசிவன் கோவில் கேட்டலத்திருவிழா இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. பல்விசேட அபிஷேக ஆராதனைகளும் இவ் மௌவாத்தயக்கதேசாளும் சுசுவேலை தெற்கு விநாயகன் கோவில் கணபதிப் பிள்ளை குழுவினரின் "பட்டினத்தடிகள்" பற்றிய விவிசைக்கச்சேரியும் இடம்பெறவுள்ளன.

மறுநாள் தேர்த்திருவிழாவும் 30ம் திகதி தீர்த்தோற்சவமும் திருநாவுக்கரசு நாயனார் குருபூசையும் இவ்வாலயத்தில் இடம்பெறவுள்ளன.

(கு)

V. R. V. போக்குவரத்துச் சேவை

யாழ். திருமலை | திருமலை யாழ்.

ஒரு வழிக் கட்டணம் ரூபா 25/-மட்டும்

யாழ். நகரிலிருந்து காலை 6 மணிக்குப் புறப்பட்டு, பகல் 12-00 மணிக்கு திருமலையை அடையும் திருமலையிலிருந்து மாலை 2 மணிக்குப் புறப்பட்டு இரவு 8-00 மணிக்கு யாழ்ப்பாணத்தையடையும்.

ஆசனங்கள் பதிவுசெய்யுமிடங்கள்:

யாழ்: 1. றிக்கோ சுவீற்ஸ் அன் கிறீம் ஹவுஸ் போன்: 464, 7889
2. V. R. V. ரான்ஸ்போர்ட், சேகரம் கட்டிடம், கொட்டடி, போன்: 8162

திருமலை: நெல்சுபே, 401, டொக்யாட் வீதி, திருகோணமலை. போன்: 482.

பிரயாணிகள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே காப்புறுதி செய்யப்பட்ட சேவை!

வசதியான சேவை!! சொகுசான பஸ் சேவை!!!

சில தினங்கள் மட்டும்

வெலிங்டன்
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி—விஜயா
தங்கபதக்கம்

லிடோ (யாழ். நகர்)
தினசரி 10-30 2-15, 4-45, 7-00, & 9-45
PERFECT FRIDAY
(வயதுவந்தவர்களுக்கு)

ஹவுஸ் புல்! ஹவுஸ் புல்!! ஹவுஸ் புல்!!!

ராஜா (யாழ்ப்பாணம்) சாந்தி (மட்டுநகர்)
நகரில் திரையிடப்பட்ட படங்களில் முன்னணியிலுள்ளது பெண்களே கூட்டம் அலைமோதுகிறது.
தினசரி 10-30, 2-15, 6-15, 9-30 தினசரி 2-30, 6-15, 9-30
● பாக்கியராஜ் ● ரதி ● சரிதா
புதிய வார்ப்புகள்
(கலிட்மன் கலர்) வயது வந்தவர்களுக்கு உகந்தது
டைரக்ஷன்: பாரதிராஜா இசை: இளையராஜா

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-00, 6-00, & 9-30
★ சிவாஜி ★ ஜெய்கணேஷ் ★ ஸ்ரீதேவி
★ ஜெயசுதா ★ சுந்தரராஜன் ★ சௌகார்ஜானகி
பட்டாக்கத்தி பைரவன்
(வண்ணப்படம்)

மனோகரா தினசரி 10-30, 2-30, 6-00, 9-00 (யாழ்ப்பாணம்)
★ சிவாஜி ★ ஸ்ரீதேவி ★ பிரமிளா
★ சுந்தரராஜன் ★ விஜயகுமார்
★ ரவிச்சந்திரன் மற்றும் பலர் நடித்த
'நிப்பொறி' மறக்கும் வண்ணப்படம்
கவரிமான்

எம்.ஜி.ஆர். இரசிகர்களுக்கு ஓர் அரியவாய்ப்பு!
சாந்தி (யாழ்நகர்)
10-30, 2-15, 6-00, 9-45
எம். ஜி. ஆர்.,—பத்மினி —ராஜசுலோசனா— நம்பியார்
அசோகன்—தங்கவேலு—மதுரம்
அரசிளங்குமரி
புத்தம் புதிய பிரதி
மீண்டுமொருமுறை வருமென எதிர்பார்க்காதீர்கள்!
இதுவே யாழ்நகரில் கடைசித்தடவை!!
கடைசி சந்தர்ப்பம்!!!

ராணி (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-00, 6-00, 9-30
50-வது நாளை நோக்கி
★ ரஜனிகாந்த் ★ ஷோபா
★ ஸ்ரீபிரியா ★ சுமன்
★ சௌகார் ஜானகி நடித்த
தீ
இலங்கை-இந்திய தயாரிப்பு

வின்சர் (யாழ்ப்பாணம்)
3வது கொட்டகை நிறைந்த காட்சி வாரமாக 3வது நடைபோடுகிறது.
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30, 6-00, 9-30
★ சிவாஜி ★ கே. ஆர். விஜயா
★ தேங்காய் சீனிவாசன் ★ மனோரமா
★ சுந்தரராஜன் நடித்த
ரிஷிமூலம்
வண்ணப் படம்)
பார்த்தவர்களே நாவில் என்றும் ஒலிப்பது
'ஜம்பதிலும் ஆசை வரும் ஆசையுடன் பாசம் வரும்.—
காணத் தயாராகுங்கள்.

இன்றைய பலன்

சித்திரை மாதம் 15-ம்திகதி திங்கட்கிழமை 27-4-1981)

மேடம்- உத்தியோக உயர்வுக்கும் இடமுண்டு. பெரிய வர்களின் ஆசி அவசியம் உண்டு. போட்டா போட்டிகளில் வெற்றி உங்கள் பக்கம் இருக்கும். விளையாட்டு வீரர்களுக்கு முதலிடத்தைப் பெறுவீர்.

இடபம்- வேண்டியவர்களுக்கு இன்று வெள்ளிப்பணம் தூள்ளும். புதிய நண்பர்களையும் தேடிக்கொள்வீர்கள். நண்பர்களால் நன்மை நடைபெறும். சகல துறைகளிலும் முன்னேற்றம் உண்டு.

மிதுனம்- பிறிய காரியத்தை முடிப்பதற்கும் அதிக பணத்தைச் செலவு செய்வீர்கள். குடும்பப்பொறுப்புகளும் அதிகரிக்கும். உறவினர்களால் நன்மை நடைபெறும்.

கடகம்- பகைமை பாராட்டிக் கொண்டே உங்கள் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு எதிரிகள் முயற்சி செய்வார்கள். கணவன் மனைவி உறவு முறை பூரணமாக நிறைந்ததாக இருக்கும்.

சிங்கம்- நீண்ட நாளாக எதிர்பார்த்த நல்ல செய்தி இன்று கிடைக்கலாம். வணிகர்களுக்கு வியாபார விருத்தியுண்டு. சிலர் புதிய துறைகளில் முதலீடு செய்ய விரும்புவார்கள். இன்று சிறப்பானதினம்.

கன்னி-அவப்பெயருக்கு இடமுண்டு. குறுக்கு வழிகளில் இறங்கவேண்டாம். வீட்டில் சிறுபிணி தலைதூக்கும். குடும்பத்திலும் சுமுகமான நிலை தென்படும்.

துலாம்- அன்னிவழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். அறிஞர்களின் தொடர்புகளும் கிடைக்கலாம். பொருள்வரவுக்கும் இடமுண்டு. சிறப்பான தினம்.

விருச்சிகம்-இதயத்தில் மகிழ்ச்சி வெள்ளம் பொங்கும். இனசனம் கூடுவர். புத்திர சுகத்துடன் தொழில் துறையிலும் வெற்றி கிடைக்கும்.

தனு- ஆரோக்கியக் குறைவுக்கு இடமுண்டு. அபாயகரமான தொழிலில் ஈடுபடுவோரிடம் கவனம் செலுத்தவும். அவசர நடவடிக்கைகளைத் தவிர்த்துக் கொள்ளவும்.

மகரம்- குடும்பவழியால் மனதுக்கு நிம்மதி பிறக்கும். காதல் விவகாரங்களுக்கும் இடமுண்டு. பொதுவாகவே டாக்டர்களுக்கு சிறப்பானதினம்.

கும்பம்- முன்னேற்றத்தில் மூட்டுக்கட்டை தோன்றக் கூடும். சிலர் வாழ்க்கையில் கடன்படவும் நேரிடலாம். நண்பர்களாலும் நஷ்டமடைவதற்கு இடமுண்டு.

மீனம்- மனம்போல் வாழ்வு இன்று மலரும். கடமையாற்றும் இடத்தில் இன்று ஒத்துழைப்புக் கிடைக்கும். சிலருக்கு பதவி உயர்வும் கிடைக்கலாம். முயற்சியால் முன்னேற்றமுண்டு.

சோதிடக் கலாநிதி
திருமதி
க. வேலுப்பிள்ளை

நாகம்மை (கல்லடி)
தினசரி 6-30 9-30
சனி, ஞாயிறு 2-30
எம்.ஜி.ஆர்.-லதா
மீனவநண்பன்
(சஸ்மன் கலர்)

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-15, 9-00,
சனி ஞாயிறு 2-30
சந்திரமோகன்-
ஜெயப்பிரதா
சிரிக்கும்சலங்கை
(புதியபிரதி-கலர்)

இன்று மக்கள்நிலை.....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ரணை கொண்டு வந்தோம் இன்றும் அதன் படியே நடந்து வருகின்றோம்.

உலக ரீதியில் சோவியத் நாட்டில் மக்கள் வெற்றி பெற்றது போல் இந்நாட்டிலும் மக்கள் வெற்றிபெற போராட்டம் ஆரம்பித்தோம் 1931 ல் ஒரு சமவுரிமை உற்பத்தி செய்யப்பட்டது. அது உற்பத்தி அதிகரித்துள்ளது. சோஷலிச நாடுகளில் மொத்த உற்பத்தி உலகில் மூன்றில் ஒரு பங்காகப் பெருகியுள்ளது.

பயங்கர நிலை

இன்று உலகம் மிகப் பயங்கரமான நிலையில் சென்று கொண்டிருக்கிறது. அணு ஆயுதங்கள் குவிக்கப்பட்டு போருக்கான சூழ்நிலை உருவாகிக்கொண்டிருக்கிறது.

உலகில் பெருந்தொகையான மக்கள் சோவியத்தின் நிலைப்பாட்டை ஆதரித்து அணிதிரண்டுகொண்டிருக்கிறார்கள் ஏகாதிபத்திய யுத்த வெறியர்கள் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்வதன் மூலம் சோவியத்தை தோற்கடிக்கலாம் எனறு எண்ணுகிறார்கள்.

பிற்போக்கு ஏகாதிபத்திய வாதிகளை சோவியத்திற்கு எதிராக ஒரு யுத்தத்தை ஆரம்பித்தால், தப்பித்துக் கொள்ளக் கூடியவர்கள் எவரும் இருக்கமாட்டார்கள்.

விவசாயம் புறக்கணிப்பு

உலகில் இன்று விவசாயத்தொழில் உற்பத்தி புறக்கணிக்கப்பட்டு வருகிறது. அணுசக்தியை, போராட்ட ஆயுதங்களை உற்பத்தியிலேயே பிற்போக்குசக்திகள் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன.

ஐ.நா. அணிசேரா நாடுகளை யுத்தத்தை எதிர்க்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். பிற்போக்குசக்திகளுக்கு இதனால் பயம் இருந்து வருகிறது.

மனிதனை வாழவைக்கிறது

எங்கள் முன்னுள்ளபெரும் பணி சமூகப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் அணுஆயுதப் போராட்டம், மனிதனை வாழவைக்காது சோவித்தலையில், சமாதானம் விரும்பும், மக்கள் சேர்ந்து, இரண்டு, ஏகாதிபத்திய சக்திகளை எதிர்த்துப் போராடவேண்டும்.

எங்கள் சகல பிரச்சினைகளையும், பொருளாதார சிக்கல்களையும் தீர்ப்பதற்கு விஞ்ஞான சோஷலிச சமுதாய அமைப்பு ஒன்றினாலேயே முடியும்.

விஞ்ஞான சோஷலிச அமைப்பை நடைமுறைப்படுத்த முன்னேடியாக சோவியத்யூனின் வழிகாட்டுதலின்றது அந்தவழிமுறைகளைத் தந்து ஆயுதபரிகரணத்திற்கு உடன்படுவேண்டும். சமாதானம் நிலவவேண்டுமானால் சோர்ந்து ஆதரவு அளிக்கவேண்டும்

எனதுவேண்டுகோள்

உலகசமாதானத்திற்கும் விஞ்ஞான சோஷலிசஅமைப்பை ஏற்படுத்துவதற்கும் நாங்கள் செயலாற்றவேண்டும் என்பதே எனவேண்டுகோள்.

மக்கள்சுபிட்சமாக வாழ பொருளாதார சுபட்சம்பெற அடிமைத்தனம் ஒழிய இன்னும் நாம் பின்பற்றவேண்டும். [அ]

குடும்பத்தகராறு ரயில் முன்பாய்ந்து தற்கொலை

(மன்னார்)

குடும்பத்தகராறு காரணமாக விரக்தியுற்ற குடும்பஸ்தர் ஒருவர் ரயில முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார்.

முருங்கன் கறிகடந்தளம் எனுமிடத்தில் நடைபெற்ற இச் சம்பவத்தில் உயிலங்குளம் பகுதியைச் சேர்ந்த தவரே இறந்தவராவார்.

மரணமடைந்தவரின் உடலை உறவினர்கள் அடையாளம் காட்டினர். உருக்குலைந்த நிலையில் காணப்பட்ட இச் சடலத்தின் பிரேத பரிசோதனை நடத்தப்பட்டது. குடும்பத்தகராறு காரணமாக இவர் தற்கொலை செய்து கொண்டார் என மரண விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது. தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. [அ]

ஸ்கூட்டர் விபத்தில் மரணமானவர் யார்?

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி கண்டிரோட்டில் நிகழ்ந்த சந்தக்கூடுகிய கடந்தவெள்ளியன்று ஸ்கூட்டர் ஒன்றினால் மோதுண்டு விபத்துக்குள்ளாகி ஒருவர் மரணமடைந்துள்ளார். இவரது சடலம் இப்பொழுது யாழ் ஆஸ்பத்திரி சவச்சாலையில் அடையாளம் காண்பதற்காக வைக்கப்பட்டுள்ளது.

30 அல்லது 35 வயது மதிக்கத்தக்க இந்நபர் கறுப்பு நிறமானவர் பாதையில் செல்கையில் ஸ்கூட்டரினால் மோதுண்டார் எனக் கூறப்படுகின்றது.

ஸ்கூட்டரை ஓட்டிய சுரேந்திரன் கிருபானந்தன் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஹரன் (மானிப்பாய்)
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த்—ஷோபா
நடித்த
முள்ளும் மலரும்
போன் 331 (கலர்)

இ போ ச சாரதிக்கு இடைஞ்சல் செய்தாராம்

(மாவட்டபுரம்)

இ. போ. ச. பஸ் சாரதி ஒருவரைக் கடமை செய்ய விடாது தடுத்ததாகக் கைது செய்யப்பட்ட ஓவசியர் 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவரான கார்த்திகேசன் தப்பி என்ற இ போ. ச பஸ் சாரதி அச்சுவேலியிலிருந்து பருத்தித்துறைக்கு ஸ்டீயரிங் செலுத்திக் கொண்டிருந்த சமயம் பஸ்ஸின் முன்பக்க வசலினுல் ஏறமுற்பட்ட நபர் ஒவரைத் தடுத்ததாகவும் இதனால் மூண்ட தர்க்கத்தின் மேற்படி நபரால் கடமையைச்செய்ய விடாது சாரதி தடுக்கப்பட்டாரென்பதாகவும் இதுகுறித்து தெரிவிக்கப்பட்டது.

காங்கேசன் துறைப் பொலிசாரால் சம்பந்தப்பட்ட ணபதி தெய்வேந்திரன் அல்லது தவராஜா என்பவரைக் கைது செய்து மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

இவர் 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டு விசாரணை ஒத்தி போடப்பட்டது. அ)

ஐ. தே. க...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சபா பிள்ளை (மானிப்பாய்), 9 திரு கிருபாமூர்த்தி பாலமூர்த்தி (காங்கேசன்துறை), 10. திரு எஸ். எல் அரியரத்தினம் உடுப்பிட்டி, 11 திரு. எஸ். பாலசிங்கம் (நல்லூர்), 12. திரு. ஆர் எஸ். சிவரத்தினம் (கோப்பாய்), 13 திரு. மனோகரன் (நல்லூர்), 14. திரு எஸ் தேவதாசன் (யாழ்ப்பாணம்). (வெ)

ஆனந்தசங்கரி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று இவரி விடுதல்லை அறிக்கையில், கூட்டணியின் வெற்றிக்கு தாமும், இவி நொச்சி மக்களும் கடுமையாக உழைக்கப்போவதாகத் தெரிவித்துள்ளார்.

ஈழநாடு
The Eelanaadu 60 சதம்

சூரியலதாவின் நாட்டிய நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

தென்னிந்திய கலைவானின் நாட்டியதாரகையான செல்வி சூரியலதா அளிக்கும் நாட்டிய மாலிகா நடன நிகழ்ச்சி இன்று திங்கள் மாலை யாழ்ப்பாணம் வீரசிங்கம்மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பல வெற்றிப்படங்களின் கதாநாயகனான தமிழக முன்னணி நடிகர் ஜெய்கணேஷ் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளுகிறார்.

செல்வி சூரியலதா; பரத நாட்டியம், குச்சுப்புடி, மோகினியாட்டம் முதலான நிகழ்ச்சிகளை இன்று அளிக்கவுள்ளார். வழுவூர் இராமையாபிள்ளையிடம் பரதமும், லோநிதி வேணுபெடி சின்னசத்தியநாதனிடம் குச்சுப்புடியும், லோசாரி நடனம் கோபால கிருஷ்ணனிடம் மோகினியாட்டமும் பயின்ற இவர் சென்னையில் பல கச்சேரிகள் மூலம் புகழ்பெற்றவர்.

கனடாவில் பம்பலப்பிட்டி புதிய கதிரேசன்மண்டபத்தில் செல்வி சூரியலதாவின் நாட்டிய நிகழ்ச்சி இம்மாதம் 30ம் திகதி வியாழக்கிழமைநடைபெறுகிறது.

விளைச்சட்டி போல் ஏழைகளுக்கு உதவும் சங்கத்தின் ஆண்டுவிழா இன்றைய யாழ்ப்பாண நிகழ்ச்சி ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. (அ)

"பணத்துடன் சென்றமகனை காணவில்லை"

பொலிசில் தாயார் புகார்

(பண்டிதநரிப்பு)

பவுண் வாங்குவதற்காகப் பணத்துடன் யாழ்நகர்சென்ற தனது மகன் டலதரன் என்பவர் மீண்டும் வீடு திரும்பவில்லை என்று சங்கானை பிளாக் பீதியைச் சோந்த திருமதி சின்னராசா தங்கரத்தினம் என்பவர் சங்கானைப் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்துள்ளார். நகைத்தொழிலாளியான தமது கணவர் தமது மகனிடம் யாழ்நகர் சென்று பவுண்வாங்கிவருமாறு பணமகொடுத்து அனுப்பிய தாகவும் இதுவரை அவர் மீண்டும் வீடு திரும்பவில்லை எனறும் அவரைக் கண்டு பிடித்துத் தருமாறும் இந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சங்கானைப்பொலிசார் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (அ)

"ஆயுதப்படையினரின் சோதனைமூலம் அப்பாவிமக்கள் துன்புறுத்தப்படுகின்றனர்"

நடவடிக்கை எடுக்குமாறு ஜனதிபதிக்கு கம்யூ. கட்சி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

"யாழ் மாவட்டத்தில் ஆயுதப்படையினரின் நடவடிக்கைகளினால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். பொதுமக்களைத் துன்புறுத்தாது அவர்களது நம்பிக்கையை வென்றெடுக்கும் வகையில் ஆயுதப்படையினர் விசாரணைகளை நடத்துமாறு ஜனதிபதி உடனடியாகப் பணிக்கவேண்டும்".

ஜனதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்கு இலங்கைகம்யூனிஸ்ட் கட்சியின் யாழ். மாவட்டக் குழுச் செயலாளர் திரு. பெரின் குமாரசாமி அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் கோரியுள்ளார்.

யாழ் மாவட்டக் குழுவின் சார்பாக செயலாளர் அனுப்பிவைத்துள்ள இக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"நீதி வேண்டிக் கொள்கோ தொடர்பாக விசாரணை செய்திருக்கும் என்று கூறி ஆயுதப்படையினர் மேற்கொள்ளும் நடவடிக்கைகள், யாழ்ப்பாண அப்பாவிப் பொது மக்களைப் பெரிதும் துன்புறுத்துவதுடன் அச்சுறுத்தலும் செய்கின்றனர். முழு மாவட்டமும் அபாயகரமான நிலைப் பிரதேசமாக அறிவிக்கப்பட்டு ஆயுதமேந்தியோர் காட்சியளிக்கும் வகையில் அவர்களின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன. இதனை உறுதிப்படுத்தும் வகையில் எமக்குத் தகவல்கள் வந்துகொண்டிருக்கின்றன எமது கவனத்திற்கு வந்துள்ள சம்பவங்களில் சில பின்வருமாறு:-

"ஊரும்பிராய் வாசியான இளைப்பாறிய தபால் சேவை பிராந்திய அத்தியட்சகரும், கௌரவமுள்ளவருமான திரு. சி. நவரத்தினத்தின் மரணம்.

"வாகனங்களையும், வீடுகளையும் பரிசோதனை செய்யும் பொழுது ஆயுதப் படையினரில் சிலர் மதுபோதையில் காணப்படுகின்றனர் அவர்கள் பலாத்காரமான, அசிங்கமான முறைகளில் பொதுமக்களை, குறிப்பாகப் பெண்களைச் சோதிக்கின்றனர்.

"விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்ட கொக்குவிலைச் சேர்ந்த தபால் ஊழியரைப் பற்றி எவ்வித தகவலும் கிடைக்கவில்லை.

மக்கள் கொண்டுசெல்லும் பணம் பறிக்கப்படுகின்றது. பிரயாணத்தை தொடர முடியாமல் சென்று பெற்றுக் கொள்ளும்படி அவர்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

"பண்டகசாலை, இடங்களில் பஸ்களும் மிகவும் பல்களும் நிறுத்தப்படுகின்றன. தபால் பிரயாணிகள் அநாவசியமாகத் தாமதிக்கப்பட்டு துன்புறுத்தப்படுகின்றனர்.

"இவைபோன்ற நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் ஆத்திரத்தை ஏற்படுமேயன்றி பயனுள்ள விசாரணைகளுக்கு சாதகமாகாது. எனவே, பொதுமக்களைத் துன்புறுத்தாது அவர்களது நம்பிக்கையை வென்றெடுக்கும்வகையில் விசாரணைகளை நடத்தும்படி நீங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றோம்".

யாழ்.மாவட்ட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

(உடுப்பிட்டி), (10) சட்டத்தரணி ஜே. கிறிஸ்துராசா (காங்கேசன்துறை) 11. சட்டத்தரணி சூரியகுமாரன் மானிப்பாய்) 12. எஸ். எஸ். இராசரத்தினம் (ஊர்காவற்றுறை) 13. எக்ஸ். ஆர். பிரான்சிஸ் (கிளிநொச்சி) 14 வ. பொ. க. ம. முதலியார், (மானிப்பாய்)

வவுனியாவில்

மாவட்ட அபிவிருத்திச்சபையின் வவுனியா மாவட்டத்திற்கான தமிழ்க் காங்கிரஸ் பட்டியல்:

1 பி வேதாரணியம், விவசாயி, (ஓமந்தை), 2 அ நாகேஸ்வரி, விவசாயி செட்டிகுளம்), 3 கோ. நாகேந்திரம், வவுனியா-நகரம்), 4 க அப்பையர், முன்னாள் கி. ச. தலைவர், (வவுனியா வடக்கு) 5 க சாந்தப்பிள்ளை, (வவுனியாதெற்கு) 6. ரவிச்சந்திரன், விவசாயி, (ஓமந்தை)

யாழ். - மட்டுநகர் - யாழ். பஸ் சேவை

புறப்படும் நேரம்: சென்றடையும் நேரம்:

காங்கேசன்துறை மாலை 4-15 → மட்டக்களப்பு காலை 4-00
யாழ்ப்பாணம் மாலை 5-30

மட்டக்களப்பு மாலை 5-30 → யாழ்ப்பாணம் காலை 4-00
காங்கேசன்துறை ,, 5-30

ஆசனம் பதிவுசெய்யும் இடங்கள்:

1. காங்கேசன் ரவல்ஸ், பிரதானவீதி, காங்கேசன்துறை. தொலைபேசி இல: 34-800
2. பூபாலசிங்கம் புத்தகசாலை, பஸ்நிலையம், யாழ்ப்பாணம் தொலைபேசி இல: 7631
3. வேலவன்ஸ், பஸ்நிலையம் முன்பாக, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல: 7387
4 ராஜேஸ்வரி ஸ்ரோர்ஸ், மட்டக்களப்பு. தொலைபேசி இல.: 2035
5. சாந்தி சினிமா, மட்டக்களப்பு. தொலைபேசி இல.: 2912

கட்டணம்:-

காங்கேசன்துறை — மட்டுநகர் 52 ரூபா
யாழ்ப்பாணம் — மட்டுநகர் 50 ரூபா

உங்கள் பொதிகளை பாதுகாப்பாகவும் சௌகரியமாகவும் கொண்டு செல்வதற்கு விசேட வசதிகள் பஸ் வண்டியில் செய்யப்பட்டுள்ளது. மிக விரைவில் பகல் சேவையும் ஆரம்பிக்கப்படும். பயணிகளுக்கு திறமையான சேவையை வழங்கும் குறிக்கோளுடனே இச்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது பிரதிதியேக வாடகைக்கும் பஸ் வண்டிகள் விடப்படும் ஞாயிற்றுக் கிழமைகளில் இரவு 8 மணிக்கு கொழும்பிற்கு விசேஷ பஸ் சேவை உண்டு.

பிரயாணிகள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே ரூபா 50,000/-க்கு காட்புறுதி செய்யப்பட்ட சேவை.

காங்கேசன் ரவல்ஸ்

122, பிரதான வீதி, காங்கேசன்துறை.

மக்கினென் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்டெட்.
MACKINNON TRAVEL SERVICE (Ceylon) LTD

தனது இன்ப ஸ்தாபனத்தை யாழ்ப்பாணத்தில் 8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். என்ற விலாசத்தில் நிறுவி இயங்கி வருகிறது.

இங்கு ✓ உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட்
✓ அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் டிறவலர்ஸ் செக்
கற்றுலாக்கள் ✓ பாஸ்போர்ட்

இப்படி எல்லா வசதிகளையும் கொழும்புக்குச் செல்லாமலே ஒழுங்கு செய்து கொள்ளலாம். உங்கள் பிரயாண ஒழுங்குகளை மக்கினென் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட் ஸ்தாபனத்திடம் ஒப்படையுங்கள்.

மக்கினென் டிறவல் சேர்விஸ் (சிலோன்) லிமிட்,
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
த. பெ. எண் 91. தொலைபேசி 8154
பயணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது.

மரண அறிவித்தல்

அப்பாக்குட்டி இலங்கையர்

(சிங்கப்பூர் பென்சனியர்)

கைதடி வடக்கைச் சேர்ந்த சிங்கப்பூர் பென்சனியர் அப்பாக்குட்டி இலங்கையர் காலமானார். இவர் காலஞ்சென்ற திருமதி சிதம்பரம் அவர்களின் அருமைக்கணவரும் திருமதி நவமணி, காலஞ்சென்ற திருமதி இராசமணி, திரு. உருத்திரன் (பொறியியலாளர் நைஜீரியா), திரு. கணேசன் (ஆசிரியர் ஓமந்தை) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. குணபாலசிங்கம் (பொதுவேலைப்பகுதி, புத்தூர்), திரு எஸ். சி. இலங்கையர் (ஹட்டன் நாஷனல்வங்கி, கண்டி), திரு. இ. இலங்கராணி, திருமதி ஆனந்தாதேவி ஆகியோரின் அன்பு மாமனாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 28-4-81 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கைதடி வடக்கில் நடைபெறும். 8994

மரண அறிவித்தல்

திருமதி தங்கரத்தினம் வயிரவநாதர்

திருமதி தங்கரத்தினம் வயிரவநாதர் - 19-4-81ல் கொழும்பில் காலமானார். இவர் காலஞ்சென்ற வயிரவநாதர் (மலாயன் ரயில்வேஸ்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தணிகாசலம் (சிங்கப்பூர் பொலிஸ்) மகேஸ்வரி, இராசத்தி, ராணி (சிங்கப்பூர்) கணேசலிங்கம் (வட்டாரக்கல்வி அதிகாரி, யாழ்ப்பாணம்) செல்வராஜா (சாந்தி சினிமா, யாழ்ப்பாணம்) தேவராஜா (இங்கிலாந்து) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவசுப்பிரமணியம் (லகசல) விஜயபாஸ்கரன் (சி. எப். ஐ) பாலகதாசன் (சிங்கப்பூர்) திருமதி ருக்மணி கணேசலிங்கம் (ஆசிரியை, இராமநாதன் கல்லூரி) திருமதி ராசமணி செல்வராஜா (பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பண்டத்தரிப்பு) திருமதி புஷ்பா தேவராசா (இங்கிலாந்து) ஆகியோரின் மாமியாரும் ஆவார். ஈமக்கிரியைகள் கொழும்பில் 20—4—81ல் நடைபெற்றது

வ. கணேசலிங்கம்,
(வட்டாரக்கல்வி அதிகாரி),
8, மாளிகா கல்லூரி ஒழுங்கை,
உடுவில்.

8993

இப்பத்திரிகை மாதம் ரூபா 60/- வீதம் சந்தாவைத்தவணைகளில் செலுத்தி பெற்றுக்கொள்ளும் வசதி இலங்கையில் உள்ள எல்லா நகரங்களிலும் உண்டு. 16-ம் இலக்க சான்றிதழ் ஏப்பிரல் 27-ம் திகதி ஆரம்பித்து வெளியிடப்படுகிறது. Registered as a newspaper at the General Post Office for transmission within Ceylon on 27th April 1970 Vide Government Gazette No. 9814/176 Dated 24th April 1970 Telegrams "Eelanaadu" Phone: 889 / 8188